தினகரன்
பிப்ரவரி 2, 2026 திங்கட்கிழமை

ஜிப்மர் சார்பில் நடந்த போட்டியில்

பரிசுகளை குவித்த அரசு பள்ளி மாணவர்கள்

புதுச்சேரி, பிப். 2: புதுச்சேரி ஜிப்மரில் நகர அலுவல் மொழி அமலாக்க குழு சார்பில் மாநில அளவில் அரசு மற்றும் தனியார் பள்ளிகளுக்கு இடையே ஹிந்தி திவாஸ் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் இந்திரா காந்தி அரசு மேல் நிலைப்பள்ளி மாணவர்கள் கலந்து கொண்டு பரிசுகளை குவித்தனர். இதில் குழு நடனத்தில் மாணவிகள் அனுஷ்கா, சுபத்ரா மொஹந்தி, பச்சையம்மாள், பிரியதர்ஷினி, ஐஸ்வர்யா ஆகியோரும், பாடல் போட்டியில் மாணவிகள் ஸ்வேதா, இந்துஜா ஆகியோரும், மவுன நாடகத்தில் மாணவர்கள் பூபதீஸ்வரன், மாதேஷ், அகிலன், பாலா, ராகுல் ஆகியோரும், தனி நபர் பாட்டு போட்டியில் மாணவர் முரளி, இசை கருவி வாசித்தலில் மாணவர் திலீப்குமார் ஆகியோர் 2ம் பரிசு பெற்றனர். மேலும், ஹிந்தி வினாடி வினா போட்டியில் மாணவர்கள் அழகன் தாவீது, ஆஸ்டின் பென்டிக் ஆகியோர் ஆறுதல் பரிசு பெற்றனர்.

மேலும் மாணவர் சம்பத்குமார் மாநில அளவில் நடந்த தடகளப் போட்டியில் 100 மீ, 200 மீ ஓட்டத்தில் முதல் பரிசும், 400 மீ ஓட்டத்தில் 2ம் பரிசும் வென்றார். மாணவர் அஸ்வின் ஹாக்கி போட்டியில் 2ம் பரிசு பெற்றார். இதையடுத்து, ஜிப்மர் சார்பில் நடந்த போட்டிகள் மற்றும் மாநில அளவிலான விளையாட்டு போட்டிகளில் வெற்றி பெற்று பரிசுகளை பெற்ற மாணவ, மாணவிகளையும், அவர்களுக்கு உறுதுணையாக இருந்த ஆசிரியர்களையும் பள்ளி துணை முதல்வர் சந்திரன், பொறுப்பாசிரியர் மணிமொழி ஆகியோர் பாராட்டினர்.

புதுச்சேரி ஜிப்மர் சார்பில் நடந்த போட்டியில் பரிசுகளை குவித்த இந்திரா காந்தி அரசு மேல்நிலைப்பள்ளி மாணவர்களை பள்ளி முதல்வர் சந்திரன் பாராட்டினார்.